Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 27-3-2017 Issued : 27-3-2017

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 24, 2017—தொகுதி 17—எண் 2**

**Tuesday the 24th January 2017—Volume 17—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 24–1–2017

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


**1. இரங்கற்குறிப்புகள்—**

(அ) முன்னாள் உறுப்பினர்கள் மறைவு 27-28

(ஆ) திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, தமிழக முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு 29

(இ) திரு. சோ. ராமசாமி, பத்திரிகை ஆசிரியர் அவர்கள் மறைவு 29-30

(ஈ) டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா, கர்நாடக இசைக் கலைஞர் அவர்கள் மறைவு 30-31

(உ) திரு. பிடல் காஸ்ட்ரோ, கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் அவர்கள் மறைவு 31

**2. இரங்கல் தீர்மானம்—**

செல்வி ஜெ ஜெயலலிதா, தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மறைவு 32-66

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 32-38

திரு. மு.க. ஸ்டாலின் 38-41

திரு. கரி. இராமசாமி 41-42

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் 43-45

திரு. உ. தனியரசு 45-49

*திரு. எம். தமிமுன் அன்சாரி 49-54

*டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் 54-55

*திரு. சே. கருணாஸ் 55-59

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, தை 11, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2017 ஜனவரி 24, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு."

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் மறைந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற்குறிப்புகள்

### (அ) முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஏ.சி. நரசிம்மன் அவர்கள் 5-5-2016 அன்றும், திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் அவர்கள் 13-10-2016 அன்றும், திரு. க. கண்ணையன் அவர்கள் 19-11-2016 அன்றும், திரு. கோ.சி. மணி அவர்கள் 2-12-2016 அன்றும், திரு. ஆ. பாலுச்சாமி அவர்கள் 11-12-2016 அன்றும் மற்றும் திரு. க. பாரமலை அவர்கள் 21-1-2017 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.சி. நரசிம்மன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 24

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 வரை ஆலங்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. க. கண்ணையன் அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் தொட்டியம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. கோ.சி. மணி அவர்கள் 1962 முதல் 1967 வரை ஆடுதுறை தொகுதியிலிருந்தும், 1989 முதல் 1991 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும், 2001 முதல் 2006 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் கும்பகோணம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1968 முதல் 1974 வரையிலும் மற்றும் 1974 முதல் 1980 வரையிலும் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1989 முதல் 1991 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. ஆ. பாலுச்சாமி அவர்கள் 1985 முதல் 1988 வரை பரமக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. க. பாரமலை அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும், 1985 முதல் 1988 வரையிலும் மற்றும் 2001 முதல் 2006 வரையிலும் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*



2017 ஜனவரி 24]

## (ஆ) திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, தமிழக முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டின் ஆளுநராக 1990 முதல் 1991 வரை மற்றும் 2004 முதல் 2011 வரை பணியாற்றிய திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் 14-1-2017 அன்று தனது 91-வது வயதில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 10-05

1942 ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் பங்கேற்றவரும், சிறந்த தேசியவாதியும், அரசியல் அனுபவமிக்கவருமான திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் பஞ்சாப் மாநில முதலமைச்சராகவும், மத்திய வேளாண்மைத் துறை அமைச்சராகவும், இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சராகவும் பணியாற்றினார். மேலும், உத்தரகாண்ட், ஆந்திரப் பிரதேசம் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் ஆளுநராகவும் பதவி வகித்தார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

## (இ) திரு. சோ. ராமசாமி, பத்திரிகை ஆசிரியர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூத்த பத்திரிகையாளரும், "துக்ளக்" பத்திரிகை நிறுவன ஆசிரியரும், வழக்கறிஞரும், நடிகரும், நாடக ஆசிரியரும், அரசியல் விமர்சகரும் எனப் பன்முக ஆற்றலாளரும், மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது அளவற்ற அன்பும், பாசமும் கொண்டிருந்தவருமான திரு. சோ. ராமசாமி அவர்கள் தனது 82-வது அகவையில் 7-12-2016 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

1957-ல் நாடகங்களை எழுதத் தொடங்கி, "தேன் மொழியாள்" எனும் மேடை நாடகத்தில் இவர் ஏற்று நடித்த கதாபாத்திரத்தின்

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 24

பெயராலேயே “சோ” என அன்புடன் அழைக்கப்பட்டார். மேலும், 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். தொலைக்காட்சித் தொடர்களிலும் புகழ்பெற்ற திரு. சோ. ராமசாமி அவர்கள், “இந்து மகா சமுத்திரம்”, “மகாபாரதம் பேசுகிறது”, “வால்மீகி ராமாயணம்” போன்ற ஆன்மீக நூல்கள் உட்பட 25-க்கும் மேற்பட்ட நூல்களையும், 14 திரைப்படங்களுக்கு கதையும் எழுதியுள்ளார். பத்திரிகைத் துறை சேவைக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். 1999 முதல் 2005 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

### (ஈ) டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா, கர்நாடக இசைக் கலைஞர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரைப்பட பின்னணிப் பாடகரும், பிரபல கர்நாடக இசை விற்பன்னரும், இசைத் துறையில் அளப்பரிய பணியாற்றியவருமான டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா அவர்கள் 22-11-2016 அன்று உடல் நலக் குறைவால் தனது 86-வது வயதில் காலமானார் என்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மறைந்த டாக்டர் எம். பால முரளிகிருஷ்ணா அவர்கள் தனது ஆறாவது வயதில் இசைப் பயணத்தைத் தொடங்கி, கர்நாடக இசையில் பல புதிய இசை வடிவங்களை உருவாக்கியவர். 25,000-க்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகளை பல்வேறு நாடுகளில் நடத்தியவர். இவர் சிறந்த பின்னணிப் பாடகர் மற்றும் சிறந்த இசை அமைப்பாளருக்கான தேசிய விருது, பத்மஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷன் மற்றும் பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான “செவாலியே” உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

2005 ஆம் ஆண்டில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி “ஜெய ஜெய லலிதே” என்ற ராகத்தை அர்ப்பணித்த அவரின் திறமையைப் பாராட்டி, தமிழக அரசின் சார்பில் “கந்தர்வ கான



2017 ஜனவரி 24] [பேரவைத் தலைவர்]

சாம்ராட்” என்ற பட்டத்தை, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியது இங்கு நினைவுகூரத்தக்கது.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரை உலக நண்பர்களுக்கும், ரசிகப் பெருமக்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

### (உ) திரு. பிடல் காஸ்ட்ரோ, கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கியூபா நாட்டின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவரும், விடுதலை பெற்ற நாட்டினை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்று உலக நாடுகளிலே புரட்சியாளர்களுக்கு உந்து சக்தியாய் திகழ்ந்தவரும், 50 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக நல்லாட்சி புரிந்தவருமான திரு. பிடல் காஸ்ட்ரோ அவர்கள் தனது 90-வது அகவையில் 25-11-2016 அன்று மறைந்த செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவர் துணிச்சலுக்கும், அசாத்திய முடிவுகளுக்கும் பெயர் பெற்றவர். இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவு கொண்டு ஆட்சி புரிந்தார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2017 ஜனவரி 24

*முற்பகல் 10-10*

## 2. இரங்கல் தீர்மானம்

### செல்வி ஜெ ஜெயலலிதா, தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானம். (குறுக்கீடு) இருங்கள். இன்றைக்கு வேறு அலுவல் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) திரு. செங்குட்டுவன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அது என்னவென்று விசாரிக்கிறேன். இருந்ததென்றால் எடுத்துக்கொள்கிறேன். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை.

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைவு குறித்து. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள், தமிழ்நாட்டின் இருண்ட நாள். நம்மையும் உலகமெங்கும் உள்ள தமிழர்களையும் நிலைகுலையச் செய்த நாள். அன்றுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் ஒட்டுமொத்த உருவமாக இருந்து, ஜனநாயகக் கடமைகளைப் பேணிப் பாதுகாக்கவும், தமிழகத்தின் உரிமைகளை மீட்கவும், தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்துக்கொண்ட, தமிழக மக்களின் இதயங்களில் கொலுவீற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பூவுலகை விட்டு மறைந்தபோதிலும் நமது இதயங்களில் தெய்வமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தன்னுடைய அரசியல் ஆசான், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் வழிகாட்டுதலின்படி, 1982 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் காலடி எடுத்து வைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சத்துணவுத் திட்டத்தை மேற்பார்வையிடும் உயர்மட்டக் குழுவின் உறுப்பினராக



2017 ஜனவரி 24] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இருந்ததோடு மட்டுமல்லாமல், 1983 ஆம் ஆண்டு கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார். அந்த ஆண்டு நடைபெற்ற திருச்செந்தூர் இடைத்தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பணிக்கப்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனது முதல் பிரச்சாரத்திலேயே அனைத்து எதிர்க்கட்சிகளையும் தோல்வி முகம் காணச் செய்து கழக வேட்பாளரை மகத்தான வெற்றி பெறச் செய்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் செயல்பாட்டினை, திறமையை, ஆற்றலைக் கண்டு வியந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை மாநிலங்களவைக்கு 1984 ஆம் ஆண்டு அனுப்பி வைத்தார்கள். மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை எண் 185. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணும் 185. பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் “மக்கள் தொண்டே மகேசனுக்கு செய்யும் தொண்டு” என்ற ஒரே சிந்தனையை தங்கள் உள்ளத்தில் கொண்டவர்கள். அதனால்தான், அவர்களுடைய இருக்கைகளும் இயற்கையாகவே ஒரே மாதிரியாக அமைந்துவிட்டன.

பேரறிஞர் அண்ணா அவர்கள், நாடாளுமன்ற மாநிலங்களவையில் எரிசக்தித் துறை மானியத்தில் கலந்துகொண்டு முதன் முறையாகப் பேசினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் முதன் முறையாக எரிசக்தித் துறை மானியத்தில் கலந்துகொண்டு பேசினார்கள். இதனை இயற்கை கொடுத்த வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

“தமிழ்நாட்டிற்குத் தேவை ‘Power’ மட்டுமல்ல; ‘Power’-ம் வேண்டும்” என்று பேசி மாநில சுயாட்சிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து, தனது பேச்சாற்றலை, ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்திய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநிலங்களவையில் முதன்முறையாகப் பேசும்போது அவர்களின்

உரையைக் கேட்பதற்காக அப்போதைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்திருந்தார்கள். மாநிலங்களவையே நிரம்பி இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் உரையை முடித்தவுடன், அவரது உரையில் உள்ள பொருள், மொழிப் புலமை, உச்சரிப்பு ஆகியவற்றை அனைவரும் பாராட்டினர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உரைதான் அப்போது நாளிதழ்களின் செய்தியாக இருந்தது.

*முற்பகல் 10-15*

தன்னுடைய பேச்சாற்றலால், எழுச்சிமிகு திட்டங்களால், மக்களை அணுகும் பாங்கால், அளப்பரிய திறமையால், ஓய்வறியா உழைப்பால், தனது கட்சியைச் சேர்ந்தவர்களால் மட்டுமல்லாமல், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடைய பேரன்பினையும், போற்றுதலையும், பாராட்டினையும் ஒருங்கே பெற்றவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தனது தன்னம்பிக்கையினால், ஆளுமைத் திறத்தால், நெஞ்சுறுதியால், துணிச்சலால், எதிரியும் தன்னை மதிக்கத்தக்க அளவிற்கு, பாராட்டத்தக்க அளவிற்கு, புகழத்தக்க அளவிற்கு தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

1984 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலமின்றி நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்தபோது, நடைபெற்ற மக்களவைப் பொதுத் தேர்தல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் கூட்டணியின் வெற்றிக்காக, தமிழ்நாடு முழுவதும் சூறாவளி பிரச்சாரம் செய்து, கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 1987-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவிற்குப்பின், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாகப் பிளவுபட்டது. கழகத்தின் தேர்தல் சின்னமான ‘இரட்டை இலை’ முடக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்கள் போடிநாயக்கனூர்





தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையையும் பெற்றார். மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அணி 27 இடங்களைக் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து, இரண்டாகப் பிளவுபட்ட கழகம், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் ஒன்றாக இணைந்தது. ஒன்றுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழகத்தின் தேர்தல் சின்னமான ‘இரட்டை இலை’ சின்னம் மீட்கப்பட்டது. இந்தியாவிலேயே இழந்த சின்னத்தை மீட்ட ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதனை மீட்ட பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், கழகக் கூட்டணிக்கு 225 இடங்களைப் பெற்றுத் தந்ததோடு, தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் முதலமைச்சர் மற்றும் இளம் முதலமைச்சர் என்ற பெருமையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வந்தடைந்தது. இந்தத் தேர்தலில்தான், 31 பெண் உறுப்பினர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த அளவுக்கு பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

2001, 2011 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றி பெறச் செய்ததோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகவும் பொறுப்பேற்று நல்லாட்சியை தமிழகத்தில் நடத்திக் காட்டினார்கள். 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த கட்சியை பொதுத் தேர்தலில் தொடர்ச்சியாக வெற்றி பெறச் செய்து வரலாறு படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், சோதனைகளைக் கடந்து சாதனைகளைப் படைத்தவர் எங்கள் அம்மா அவர்கள். சவால்களை வெற்றி கண்டு சரித்திரம் படைத்தவர் எங்கள் அம்மா. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது வாழ்க்கையில் எதிலுமே, எப்பொழுதுமே, நம்பர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 24

*1 தான். படிப்பில், நாட்டியத்தில், திரையுலகில், அரசியலில் என அனைத்திலும் மாண்புமிகு அம்மா அவர்கள் நம்பர் 1 தான்.*

*அனைத்திலும் நம்பர் 1 ஆக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை நம்பர் 1 மாநிலமாகவே ஆக்க விரும்பி அதைச் செயல்படுத்தியும் காட்டினார்கள்.*

*முற்பகல் 10-20*

*காவேரி நடுவர் மன்ற ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட்டது, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தியது, தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்கியது, புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டுவந்து சென்னைவாழ் மக்களின் குடிநீர் ஆதாரத்தை உறுதி செய்தது, விலையில்லா அரிசியை வழங்கியது, கட்டணமில்லாக் கல்வியை உறுதி செய்தது என ஆயிரக்கணக்கான திட்டங்களுக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

*மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திய அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட், அம்மா மருந்தகங்கள், அம்மா விதைகள், அம்மா திட்டம் என அம்மா பெயர் தாங்கிய பல்வேறு திட்டங்கள் என்றென்றும் அவரது மங்காப் புகழை எடுத்து இயம்பும்.*

*ஏழை, எளியோர், ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோர் வாழ்வில் வளம் சேர்க்க எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்குதல், விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்குதல், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், தாலிக்குத் தங்கம், கல்வி உதவித் தொகை, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா மடிக்கணினி, கட்டணமில்லாமல் 100 யூனிட் மின்சாரம் என எண்ணற்ற திட்டங்களை வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

*பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரை தன் இரு கண்களாகப் பாதுகாத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவேதான், தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மகளிர் எழுத்தறிவுத் திட்டம், விலையில்லா சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம், மகளிர் சுகாதார வளாகங்கள், பெண்கள் திருமண உதவித் திட்டம், தாய்-சேய் நலன் காக்க உயர்த்தப்பட்ட நிதியுதவித் திட்டம், மகளிர் காவல் நிலையங்கள், மகளிர் சிறப்பு அதிரடிப் படை, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிருக்கான தொழிற்பேட்டைகள், பணிபுரியும் மகளிர் விடுதிகள், உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு, பணிபுரியும் மகளிருக்கு 9 மாத கால மகப்பேறு விடுப்பு, மகளிர் உடல் பரிசோதனைத் திட்டம், தாய்ப் பால் வங்கித் திட்டம், பொது இடங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகள், அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம், குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம் என எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.*



2017 ஜனவரி 24] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

> *'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
> *என்பும் உரியர் பிறர்க்கு'*

*என்றார் திருவள்ளுவர். அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர். அன்புடையவரோ, தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர். திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, அன்பால் அனைவரையும் கட்டுப்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தூய்மையான அன்பை மக்களிடத்திலே செலுத்திக் கொண்டிருந்ததால்தான், ஏழை தாய்மார்களுக்கு, ஏழை மாணவ, மாணவியருக்கு, ஏழை மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருந்ததால்தான், மாண்புமிகு அம்மா அவர்களின் பிரிவைத் தாங்க முடியாமல் கோடானுகோடி மக்கள் கதறி, கதறி அழுத காட்சியை நாம் கண்டோம். அன்புக்கு மிஞ்சியது ஏதுமில்லை என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நடைமுறையில் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.*

"The difference between a politician and a statesman is that a politician thinks about the next election, while the statesman thinks about the next generation" *என்றார்* James Freeman Clarke *என்ற ஆங்கில அறிஞர். இதற்கேற்ப, அரசியல்வாதியாக மட்டுமல்லாமல், எதிர்காலத்தை சிந்திக்கக்கூடிய அரசியல் மேதையாக வாழ்ந்து, தன் வாழ்நாளையே இந்த நாட்டிற்காக அர்ப்பணித்த மாமேதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தன்னிகரில்லா தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைவிற்கு, பின்வரும் இரங்கல் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 24

'அகிலத்தின் அகல் விளக்காய்; தியாகத்தின் திருவிளக்காய்; ஒளி தரும் தீபமாய்; மனிதாபிமானத்தின் மறுஉருவமாய்; மனிதநேயத்தின் இலக்கணமாய்; காவேரியை மீட்டு வந்த பொன்னியின் செல்வியாய்; தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவியாய்; எட்டரை கோடி தமிழ் மக்களின் ஏந்தலாய்; பன்மொழிப் புலவராய்; பல்கலை வித்தகராய்; கல்விக்குக் கணினி, உயிர் காக்க காப்பீடு; கழனிக்கு காவேரி; உலைக்கு அரிசி; தமிழக உயர்வுக்கு ஆலை என அனைத்தையும் தந்து, ஈடில்லா மாநிலமாய் தமிழகத்தை உயர்த்திட்ட வான் மழை மேகமாய்; தமிழ் மக்களின் தாயாய்; தமிழ் மொழியின் பாதுகாவலராய்; தமிழ்நாட்டின் தவப்பெரும் புதல்வியாய்; 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்ற தத்துவத்தையே வாழ்க்கையாய் அமைத்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் குறிப்பாக, ஏழை, எளிய மக்களுக்குத் தொண்டாற்றி, இறுதிவரையில் தனக்கென வாழாமல் பிறருக்குரியவராக வாழ்ந்தவரும், அனைவரின் அன்பிற்கும், போற்றுதலுக்கும் உரியவராகவும், மாபெரும் மக்கள் இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகவும், தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் பணியாற்றிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் யாரும் எதிர்பாராத வகையில், மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், ஆற்றொணாத் துயரத்தையும் தெரிவிப்பதோடு, தங்கநிகர் தாயின் மறைவால் வருந்தும் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.'

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய மறைவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் வாழ்வில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிறகு, குறிப்பாக, அவர்களுடைய மறைவுக்குப் பிறகு அவருடைய இயக்கத்தைத் தலைமைதாங்கி நடத்தியதோடு, அந்த இயக்கத்தை ஆளும்கட்சி ஆகக்கூடிய



2017 ஜனவரி 24] [திரு. மு.க. ஸ்டாலின்]

வகையில் வெற்றிபெறச் செய்தவர் அம்மையார் அவர்கள். அவர்களுடைய ஆட்சிக்கால சட்டங்களும், திட்டங்களும் மக்கள் நலனுக்கு உகந்தனவா அல்லவா என்பதன் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் அதனைச் சில நேரங்களில் வரவேற்றிருக்கிறது; சில நேரங்களில் போராட்டங்களையும் நடத்தியிருக்கிறது. மறைந்த முன்னாள் முதல்வர் அவர்களும், அதேபோல, நானும் 1989 ஆம் ஆண்டு ஒரே காலக்கட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்று, இந்தப் பேரவைக்குள் காலடி வைத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அன்றைக்கு நான் ஆளுங்கட்சி வரிசையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அவர் எதிர்க்கட்சித் தலைவர் வரிசையில் அமர்ந்து பணியாற்றியிருக்கக்கூடிய அந்தக் காட்சியை நான் இப்பொழுதும் எண்ணிப் பார்க்கிறேன். தமிழகத்தில் சுனாமி ஏற்பட்ட நேரத்தில், அந்தப் பேரழிவுக்கு நிதி திரட்டப்பட்ட நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நிதி அளிப்பதற்காக 2005 ஆம் ஆண்டு முதன்முதலில், முன்னாள் முதலமைச்சர், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்களை நான் சந்தித்து 21 இலட்சம் ரூபாய் வழங்கினேன். அப்போது அவர் "தலைவர் கலைஞர் அவர்கள் எப்படியிருக்கிறார்? அவருக்கு என்னுடைய நன்றியைச் சொல்லுங்கள்" என்று என்னிடத்திலே எடுத்துச் சொன்னார். சட்டமன்றத்தில் அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும், நான் துணை முதலமைச்சராகவும் இருந்து பணியாற்றியிருக்கிறோம். அதேபோல, அவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில், நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றக்கூடிய அந்த வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருப்பதில் உள்ளபடியே பெருமையாகத்தான் அமைந்திருக்கிறது.

2016 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. வெற்றிபெற்று, ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், பதவியேற்பு விழா நிகழ்ச்சி சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவிற்கு எதிர்க்கட்சிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அதை நானும் ஏற்றுக்கொண்டு, எதிர்க்கட்சித் தலைவராக நானும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் அந்த விழாவிற்கு வந்திருந்தோம். விழாவிற்கு வந்த நேரத்தில், 11-வது வரிசையிலே எங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதிலே அமர்ந்து, விழா முடிந்து, அதற்குப் பிறகுதான் நாங்கள் கிளம்பி சென்றோம். நான் அதைப்பற்றி பெரிதுபடுத்தவில்லை, பொருட்படுத்தவும் இல்லை.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 ஜனவரி 24

எங்கும் அதுபற்றி நான் விமர்சிக்கவும் இல்லை. ஆனால், சில ஊடகங்களில் அது தவறாக, செய்திகளாக பிரசுரிக்கப்பட்டது. அந்தச் செய்தியை அறிந்த அம்மையார் அவர்கள் மிகுந்த வருத்தத்தோடு ஓர் அறிக்கையைக்கூட வெளியிட்டிருந்தார்கள். "என்னையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தையோ அவமரியாதை செய்யும் நோக்கத்தில் அது நடந்திடவில்லை. அதற்காக நான் வருத்தப்படுகிறேன்" என்று சொன்னது மட்டுமல்ல, "மாநில நலனுக்கு இணைந்து பாடுபடுவோம்" என்ற அந்தச் செய்தியையும் அவர்கள் அதிலே குறிப்பிட்டுக் காட்டியிருந்தார்கள். அதிலே, உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சி.

*முற்பகல் 10-30*

அதுமட்டுமல்ல, அவர் உடல் நலிவுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, "விரைவிலே அவர் உடல் நலம்பெற்று திரும்பிட வேண்டும்" என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அறிக்கை வெளியிட்டது மட்டுமல்ல, என்னையும் எங்களுடைய துணைத் தலைவர் அவர்களையும், திரு. பொன்முடி மற்றும் திரு. வேலு போன்ற எங்களையெல்லாம் மருத்துவமனைக்கு அனுப்பி உடல் நலத்தை விசாரித்து வருமாறு உத்தரவிட்டார்கள். நாங்களும் சென்று விசாரித்துவிட்டு வந்தோம். அவர் நலம் பெற்றுத் திரும்புவார் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஆனால், எதிர்பாராத நிலையிலே "அவர் மறைந்துவிட்டார்" என்ற செய்தி அதிர்ச்சியாக அமைந்தது.

எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் காவேரி மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்தபோது, இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு, அதிர்ச்சிக்கு ஆளாகி, "உடனடியாக நேரடியாகச் சென்று அஞ்சலி செலுத்திவிட்டு வாருங்கள்" என்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அதற்குப் பிறகு, நாங்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அம்மையார் அவர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வந்தோம்.

அம்மையார் அவர்களுடைய சிறப்புகள் எத்தனையோ இருக்கலாம். ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், பாராட்டப்படக்கூடிய, பெருமைப்படக்கூடிய ஒரு சிறப்பு என்னவென்று கேட்டால், எதற்கும் அஞ்சாமல், எதைப் பற்றியும் கவலைப்படாமல் எதையும் சந்திக்கக்கூடிய ஆற்றல் படைத்தவராக



2017 ஜனவரி 24] [திரு. மு.க. ஸ்டாலின்]

அவர் விளங்கினார் என்பதுதான் உண்மை. இன்றைக்கு நாம் அவரை இழந்திருக்கிறோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், குறிப்பாக தலைவர் கலைஞர் அவர்களின் சார்பில், என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் கண் முன்னே அமர்ந்திருந்த நம்முடைய முன்னாள் முதலமைச்சர் இன்று சட்டமன்றத்திலே இல்லை. இதை எண்ணிப்பார்க்கும்பொழுது, "ஆண்டவன் ஏன் இவ்வாறு ஒரு நிலையை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறான்" என்பது எனக்குப் புரியவில்லை. காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், எங்களது கட்சியினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்கள் சார்பாகவும், திரு. ராகுல் காந்தி அவர்களுடைய சார்பாகவும் முதலிலே என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எவ்வளவு தைரியமான முடிவுகளை எடுத்தார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது நான் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். பல நேரங்களிலே, பல பிரச்சினைகளிலே அவர்களது அணுகுமுறையைக் கண்டு நான் பலமுறை வியந்திருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியும், அகில இந்திய அண்ணா தி.மு.க.-வும் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்திருக்கிறோம். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அம்மையார் அவர்களை எங்களால் மறக்கவே முடியாது.

நான் பலமுறை அவர்களை தனியே சந்தித்துப் பேசியிருக்கிறேன். கடைசியாக, இந்த இடத்திலே, அவர்கள் வெளியிலே வரும்பொழுது அவர்களை சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். அப்பொழுது, உடல்நலக் குறைவால், நடக்க முடியாத நிலையிலே அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்து "உங்களுக்கு உடம்புக்கு எப்படியிருக்கிறது?" என்று கேட்போம் என்று நினைத்தேன். ஆனால், அதற்குள்ளே எனக்கு அருகிலே வந்து, "உங்கள் உடல்நிலை எப்படியிருக்கிறது? நீங்கள்

[திரு. கரி. இராமசாமி] [2017 ஜனவரி 24

மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனையைச் சரியாகச் செய்துகொள்கிறீர்களா?" என்று கேட்டார்கள். உண்மையிலே அதையெல்லாம் மறக்கக்கூடிய நிலைமையிலே நான் இல்லை.

*முற்பகல் 10-35*

அவரது மறைவு என்பது பெரிய இழப்பு; ஓர் இரும்பு மனிதரை நாம் இழந்திருக்கிறோம். அவரைப் பொறுத்தமட்டில், பல பிரச்சினைகளிலே போராடியவர்; கடுமையானப் போராட்டங்கள். எந்த மிரட்டல்களுக்கும் அஞ்சாமல் நடந்தவர் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கொள்கை ரீதியாக சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அவர்களை மறக்கவே முடியவில்லை. என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. கொள்கை வேறுபாடுகளால், பல தடவை மாறுபட்ட கருத்தைக்கூட அவர்கள் இருக்கும்போதே நேரடியாக நான் பேசியிருக்கிறேன். ஆனால், அவர்களுடைய தைரியத்தையும், அவர்களுடைய கட்டுப்பாடான வளர்ச்சியையும் யாராலும் தடுக்க முடியவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களை இன்று இழந்து இருக்கிறோம் என்பதை நான் மன வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். என்ன செய்யப்போகிறோம் என்றும் எனக்குப் புரியவில்லை.

இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு மனிதாபிமானத்துடன் நாம் இப்போது நடந்து கொண்டிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார்கள். அவர்கள் உடல்நலம் குன்றியிருந்தபோது எவ்வாறு மறைந்த முதலமைச்சரைப்போய் பார்த்தார்கள் என்று. அதேபோல எங்கள் கட்சியின் அகில இந்திய துணைத் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் முன்னாள் முதலமைச்சருக்கு உடல்நலக் குறைவு என்று கேள்விப்பட்டவுடன், உடனடியாகச் சென்னைக்கு வந்தார். சென்னையிலே அவர்களைப் பார்வையிட்டுச் சென்றார்கள். அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னவுடன், உடனடியாக சென்னைக்கு வந்து அந்த துக்க நிகழ்ச்சியிலே கலந்துகொண்டார்கள். இதுபோன்ற ஓர் அரசியல் நாகரிகத்தை வித்திடுவதற்கும், நம்முடைய மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்.



2017 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் இரும்புப் பெண்மணியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக, தமிழகத்தின் முதல்வராக இருந்து, மக்களால் 'அம்மா' என அன்போடு அழைக்கப்படும், மறைந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு நான் சார்ந்திருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த முதல்வர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இராணுவக் கட்டுப்பாட்டோடு மிகச் சிறந்த அமைப்பாக வழிநடத்தியவர். இதற்கு அவருடைய அசாதாரணமான துணிவும், தெளிந்த பாதையுமே வெற்றிக்கு துணை நின்றிருக்கின்றன. எதையும் சரி என்று பட்டால் துணிந்து செய்திடும் ஆற்றலும், தவறு என்றால் புறந்தள்ளிவிட்டு, பயணத்தை வீரியமுடன் நடைபயிலும் கம்பீரத்திற்கு நம் மறைந்த முதல்வர் அவர்களுக்கு நிகர் யாருமில்லை.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததைப்போல, மறைந்த முதல்வர் அவர்கள் கட்சியின் பொறுப்பை ஏற்று சந்தித்த முதல் தேர்தலில், 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற திருச்செந்தூர் சட்டப் பேரவை இடைத் தேர்தலில், எனது ஊரான காயல்பட்டினத்திற்கு பிரச்சாரத்திற்கு வந்து, 'முஸ்லிம் பெண்களும் பொது வாழ்க்கைக்கு வரவேண்டும், அரசியலில் தடம் பதிக்க வேண்டும்' என வலியுறுத்தியதை நான் அறிவேன். அதை உறுதியுடன் நடைமுறைப்படுத்தக்கூடிய வகையிலே, இன்றைய அமைச்சரவையில் அவர்கள் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரி திருமதி நிலோபர் கபில் அவர்களை அமைச்சராகப் பொறுப்பேற்க வைத்து, தமிழகத்தின் முதல் முஸ்லிம் பெண் அமைச்சர் என்ற பெருமையைச் சேர்த்ததையும், இங்கே நன்றி உணர்வோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திய விடுதலைக்காகவும், தமிழ் மொழி இந்திய ஆட்சி மொழியாக வேண்டுமெனவும், சிறுபான்மை சமுதாயம் உரிமைகளைப் பெற்று பாதுகாப்போடு வாழ வேண்டுமென நாளும்

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2017 ஜனவரி 24

உழைத்த எங்கள் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களின் நூற்றாண்டு விழாவை மறைந்த முதல்வர் அவர்கள், முதல்வராகப் பொறுப்பேற்ற 1995 ஆம் ஆண்டு தமிழ்நாட்டினுடைய அனைத்து மாவட்டங்களிலும் சிறந்த வகையிலே நடத்தி, அந்தத் தலைவருக்கும், எங்கள் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்ததையும் இங்கே நான் நன்றியுணர்வோடு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

69 சதவிகித இடஒதுக்கீட்டுக்கான வெற்றி, மழைநீர் சேமிப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், அம்மா நலத் திட்டம் என மறைந்த முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்கள் நாடே பாராட்டக்கூடிய திட்டங்களாக இருக்கின்றன.

முற்பகல் 10-40

அனைத்து உறுப்பினர்களின் நல்ல கருத்துகளுக்கும் மதிப்பு அளிக்கக்கூடியவராக விளங்கியவர்கள் நமது மறைந்த முதல்வர் அவர்கள். என்னுடைய தொகுதி கடையநல்லூர் தாலுகா அலுவலகம் ஊருக்கு வெளியில் செல்கின்றது, அது பொதுமக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்காது, ஊரினுடைய எல்லையிலேயே கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே பிறப்பித்த ஆணையை மாற்றி, ஊரினுடைய எல்லையிலேயே அமைவதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி அந்தத் திட்டத்தை இன்னும் சில மாதங்களிலே அமைவதற்கு உண்டான வழிவகை செய்தவரும் நமது மறைந்த முதல்வர் அவர்கள் என்பதை இங்கே நன்றியுணர்வோடு நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிறுபான்மை சமுதாயம், தாழ்த்தப்பட்ட, அடித்தட்டு மக்களின் உயர்வுக்காக மறைந்த முதல்வர் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கும் இங்கே நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைத்துக் கட்சிகளும் தங்களின் ஜனநாயகக் கடமைகளை சிறப்போடு நிறைவேற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இன்று சட்டப் பேரவைத் தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நான்கு கட்சிகளில் ஒரே உறுப்பினரைக் கொண்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கும் இந்த சட்டப் பேரவையினுடைய வளாகத்திலேயே ஓர் அலுவலகம் வழங்குவதற்கு அவர்கள் ஆணையிட்டதையும் இங்கே



2017 ஜனவரி 24] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

நன்றியுணர்வோடு தெரிவித்து முதல்வர் அம்மா அவர்களுடைய மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, தமிழக மக்களின் துயரத்திலே நாங்களும் பங்கேற்கிறோம் என்பதை அறிவிக்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகத் திகழ்ந்து வருகிற இந்தியத் திருநாட்டில், ஒரு ஜனநாயக அரசியல் கட்சிக்கு தலைமைப் பொறுப்பேற்று, வழி நடத்தி, தாம் வழி நடத்துகிற அரசியல் கட்சியை அதே ஜனநாயக மாண்போடு, கட்டுக்கோப்போடு, ஒழுக்கத்தோடு, மண்ணில் வாழ்கிற மக்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்பை, சமமான உரிமையை வழங்கி, ஜனநாயகத்தின் உயர்ந்த மாண்புகளாக இருக்கிற சுதந்திரம், மக்களாட்சி, குடியரசு, இறையாண்மை, சட்டத்தின் ஆட்சி, தனி மனித உரிமை என இந்த உயர்ந்த நோக்கங்களை மானுட சமூகம் பன்னெடுங்காலமாக உயர்ந்த நோக்கங்களாகக் கருதி, இத்தனை யுகங்களாக வாழ்ந்து அவற்றின் உச்சத் திட்டங்களாக, கொள்கைகளாக, தத்துவங்களாக அவற்றை நாம் வடிவமைத்து, பரிணமித்து, வளர்த்தெடுத்து, அந்த ஜனநாயக மாண்பில் வாழ்ந்து வருகிற இந்த மானுட சமூகத்தில் அந்த உயர்ந்த பண்புகளை தன் உயிருக்கு உயிராக நேசித்து தன் உயிர் இருக்கின்ற வரை போற்றிப் பாதுகாத்த உலகத்து மானுட சமூகத்தின் பேரன்பைப் பெற்ற ஆற்றல்மிகு அறிவுசார் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்கள் கட்சியை வழி நடத்திய பாங்கும், தன்னுடைய கட்சி நாட்டை ஆளுகின்ற வாய்ப்பை நாட்டு மக்களின் பேராதரவோடு பெற்றபோது அந்த நாட்டு மக்களுக்கு தான் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அவர் தந்த திட்டங்கள், அந்தத் திட்டங்களை அவர் நாட்டு மக்களுக்காகச் செயல்படுத்திய விதம்தான் இந்தியா மட்டுமல்ல உலகத்தின் பேராதரவை, நம்பிக்கையை, புகழை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தந்தது; இப்பொழுதும் தந்து வருகின்றது.

20 கிலோ விலையில்லா அரிசி தந்து, பசியை, பட்டினியைப் போக்கி, மத்திய அரசோ அல்லது வேறு மாநில அரசுகளோ உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முன்பே தமிழ்நாட்டில்

[திரு. உ. தனியரசு] [2017 ஜனவரி 24

விலையில்லா அரிசி தந்து, பசி என்று இந்த மண்ணில் எவர் ஒருவரும் வாழக் கூடாது என்று முதல் திட்டமாக அவசியமான அந்தத் திட்டத்தை ஏழை மக்களின் நலன் கருதித் தந்தார் அம்மா. அதுபோன்று சட்டத்தின் ஆட்சியின்மீது அவர் கொண்டிருந்த பற்று காரணமாக மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, தனித்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு சட்டத்தின் ஆட்சியை உயிருக்கு உயிராக நேசித்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமக்கு நெருக்கமானவர்கள் என்றாலும், வேண்டியவர்கள் என்றாலும், தன்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் என்றாலும், தன்னுடைய அமைச்சரவையிலே அமைச்சர்களாகவே இருக்கிறவர்கள் என்றாலும்கூட, குற்றச்சாட்டு என்று வந்தால், பாகுபாடில்லாமல் தன் கடமையைச் செய்து, நாட்டு மக்கள் நேசித்த சட்டத்தின் ஆட்சியை நடைமுறையில் நிகழ்த்திக்காட்டிய அற்புதத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*முற்பகல் 10-45*

சமூக நலத் திட்டங்களிலே பன்னெடுங்காலமாக சமூகத்திற்கு தீங்கை, தவறை, ஒரு திட்டம் தருகிறது என்று கருதினால், அந்தத் திட்டத்தை விலக்கி வைப்பதற்கு அவர் எப்பொழுதும் தயங்கியதில்லை. குறிப்பாக, பரிசுச்சீட்டு விற்பனை. பரிசுச்சீட்டு விற்பனையை சமூகத்திலிருந்து அவ்வளவு இலகுவாக அகற்றிவிட முடியாது என்று நாம் கருதியபொழுது, அந்தக் கருத்து தன்னுடைய கவனத்திற்கு வந்தபொழுது, உடனடியாகப் பரிசுச்சீட்டு விற்பனையை விலக்கி வைத்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பெண் குழந்தைகளை இந்தச் சமூகம் ‘பாவம் அல்லது சுமை’ என்று கருதிய நேரத்தில், இந்தியாவிலேயே, உலகத்திலேயே பெண் குழந்தைகளை நேசித்து அதற்காக ‘அரசு தொட்டில் குழந்தைத் திட்டம்’ தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கருவிலேயே பெண் சிசுவை அழிக்கிற சமூகச் சீரழிவிலிருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாத்து, சமூகத்திற்கு நம்பிக்கையைத் தந்து, ‘அரசு தொட்டில் குழந்தைத் திட்டம்’ தந்த, உயிருக்கும் மேலான தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; ஏழைத் தாய்மார்களின் இல்ல பணிச் சுமையைக் குறைக்க, இலவச மிக்சி, கிரைண்டர், மின் விசிறி தந்து அவர் தாய்மார்களை நேசித்த பாங்கு இதுவரையில் வேறு எந்த அரசும் செய்திடாதது.



2017 ஜனவரி 24] [திரு. உ. தனியரசு]

மாணவச் செல்வங்களுக்கு காலணியிலிருந்து மடிக்கணினி வரை தந்து, சமூகத்தில் ஓர் அறிவுசார் மாணவச் செல்வங்களாக, உலகளாவிய தரத்திற்கு அவர்களை உயர்த்த வேண்டுமென்று கருதிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோன்று அரசியல் எதிரியாக இருந்தாலும் அல்லது எந்த நிலையிலாவது தன்னுடைய நோக்கத்திற்கு, தன்னுடைய விருப்பத்திற்கு, தன்னுடைய நற்காரியங்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடும் என்று தன் நுண்ணறிவால் கருதினால், அது தமிழகமாக இருந்தாலும், இந்திய தேசமாக இருந்தாலும், உலக அளவிலே தன்னுடைய செயலுக்கு யாராவது சதி செய்து, வஞ்சகம் செய்து, சூழ்ச்சி செய்கிறார் என்றால், அதை இலகுவாக நுண்ணறிந்து அந்தச் சதியை, அந்த வஞ்சகத்தை, அந்தச் சூழ்ச்சியை முறியடித்து தன்னுடைய வெற்றிப் பாதையில் கடைசி வரை வெற்றி வாகையைச் சூடிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களை உயிருக்கு உயிராக நேசித்தார். ஏழை முதியோர் உதவித் தொகையை ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தித் தந்தார். இத்திட்டத்தினால் சுமார் 30 இலட்சம் முதியோர் பயனடைந்தனர். யாருமே கோரிக்கை வைக்காதபொழுது, இலட்சக்கணக்கான மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் உதவித் தொகையை ரூ.500/- என்பதை ரூ.1,000/- ஆக உயர்த்தித் தந்து ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்த தலைவி; மீனவர்களுடைய நலனை, உரிமைகளை மீட்டெடுத்த தலைவி; நெசவாளர்கள், மகளிருக்கான இட ஒதுக்கீடு; விவசாயிகளுடைய நலனில் அக்கறை; பென்னி குயிக், ராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன், வேலு நாச்சியார் மற்றும் மாவீரன் தீரன் சின்னமலை உள்ளிட்ட சான்றோர் மற்றும் தியாகிகளின் புகழை, பெருமையை வாழுகின்ற நம் சமூகமும் பெற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு மணிமண்டபங்கள் தந்து அந்தச் சான்றோர்களுக்குப் பெருமை சேர்த்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

7 தமிழர்களின் உயிர் காக்க நடவடிக்கை; கச்சத் தீவை மீட்க நடவடிக்கை; 69 சதவிகித இட ஒதுக்கீட்டை இந்தியாவிலேயே

[திரு. உ. தனியரசு] [2017 ஜனவரி 24

மீண்டும் உறுதி செய்து, சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பெருமையையும் பெற்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தடையில்லா மின்சாரத்திற்குத் திட்டம்; தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு; குடிசையிலே வாழுகின்ற ஏழைத் தொண்டனும் கோட்டையிலே வந்தமர்ந்து ஆட்சி நிருவாகத்தை நடத்துகிற வாய்ப்பு; சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக ஏழை தொண்டனுக்கும் அந்த வாய்ப்பைத் தந்த ஜனநாயகத்தின் மாண்பு நிறைந்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உயிருக்கு உயிராக தன்னை நேசித்தவர்களை, விசுவாசித்தவர்களை, அதே உயிருக்கு உயிராக நேசித்து அவர்களை வாழ வைத்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 10-50

நம்மைவிட்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைந்தபொழுது, அவர்களுடைய உயிரற்ற உடலுக்கு நாட்டு மக்கள் மரியாதை செலுத்துவதற்காக ராஜாஜி மண்டபத்திலே வைத்திருந்தபொழுது, அவர்களுடைய உடல் அதே கம்பீரத்தோடு, அதே ஒழுங்கோடு, ஈரம் கசிந்த இதயத்தோடு மக்கள் அலை அலையாய் கட்சிகளைக் கடந்து, சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, நாடே வந்திருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கண்ணீரோடு அஞ்சலி செலுத்தியது ஒரு வரலாறு. அவருடைய இறுதி ஊர்வலம்கூட அமைதியாக, அதாவது, அவர்கள் எந்த ஒழுக்கத்தை நிலைநாட்டினார்களோ, எந்தக் கட்டுப்பாட்டை பராமரிக்க நினைத்தார்களோ அதே ஒழுங்கோடு, கட்டுப்பாட்டோடு தன் உயிர் பிரிந்த பிறகும் இறுதிப் பயணத்தில்கூட அந்த ஒழுங்கைப் பாதுகாத்து, அவர் இந்த மண்ணிலே விதையாய் வைக்கப்படுகிற வரையிலும், அவர் கண்ட அந்தக் கனவினை நடைமுறைப்படுத்தியதிலே வேறு யாருக்கும் கிடைக்காத மிகப் பெரிய பெருமையைப் பெற்றவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எந்தத் தலைவராவது உயிரிழந்த பிறகு, ‘அவர் மறைந்து விட்டார்’ என்ற செய்தியினை தொலைக்காட்சியிலே கேட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் தங்களுடைய உயிரினை இழந்திருப்பார்களா? தன் இதயம் நின்றுவிடுகிற அளவுக்கு இந்த மக்களை நேசித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த அளவுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் இந்த நாட்டு மக்கள் நேசித்தார்கள். வேறு



2017 ஜனவரி 24] [திரு. உ. தனியரசு]

யாரும் எதிர்ப்பார்க்காத, வேறு யாருக்கும் கிடைக்காத, மக்கள் நேசித்த அந்த வரலாற்றுப் புகழோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைவுற்றார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மறைவினால் நாட்டு மக்கள் கண்ணீருடன், வேதனையையும், துன்பத்தையும் சுமந்து எவ்வாறு வருந்துகிறார்களோ, வேதனைப்படுகிறார்களோ அதனுடன் என்னுடைய வேதனையையும் இணைத்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய புகழஞ்சலியையும், இரங்கலையும் பதிவு செய்து வாய்ப்புக்கு நன்றி பாராட்டி நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பெருமதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தின்மீது பேசும் சோகமான தருணத்தில் நான் நின்று கொண்டிருக்கின்றேன். வார்த்தைகள் வழி மறிக்கின்றன; விழியில் கண்ணீர் முட்டுகிறது; இந்த அவையே உணர்ச்சிமயமாய் அமர்ந்து கொண்டிருக்கிறது. ஐயா பெரியாரின் துணிச்சலையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பண்புகளையும், பொன்மனச் செம்மல் ஐயா எம்.ஜி.ஆர். அவர்களின் இரக்க உணர்வுகளையும் தன்னகத்தே கொண்ட தனிப்பெரும் தலைவராக, தமிழ்நாட்டிலே 33 ஆண்டுக் காலமாக அம்மா அவர்கள் வலம் வந்தார்கள். பெண் சிங்கம் என்றும், இரும்புப் பெண்மணி என்றும் எதிர் தரப்பாலும் போற்றப்பட்டார்கள். ஆறு முறை தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் என்ற வரலாற்றுச் சாதனைக்கு சொந்தக்காரராகத் திகழ்ந்தார்கள். ஓர் கட்சியை இராணுவக் கட்டுப்பாட்டோடு எப்படி வழி நடத்தமுடியும் என்பதற்கு இந்தியாவிலேயே முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களை, அவர்களுடைய துணிச்சல்மிகு நடவடிக்கைகளை இன்றும் வரலாறு போற்றிக் கொண்டிருக்கிறது. அவர் இந்தியாவிற்குப் பிரதமராக இருந்து இந்தியா எங்கும் அந்தப் புகழைப் பெற்றார். ஆனால், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டிற்கு முதல்வராக இருந்து இந்தியாவெங்கும் அந்தப் புகழைப் பெற்றார் என்பதுதான் அவருடைய கூடுதல் சிறப்பு. அவர் அந்த நிலையைப் பெற்றதற்கு

இறைவனுடைய அருளும், அவருடைய அயராத உழைப்பும், அறிவும், ஆற்றலும் இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது.

உலகிலேயே தென்கிழக்கு ஆசியாவில்தான் அதிகமான அளவு பெண் தலைவர்கள் உருவானார்கள். அப்படி உருவான பெண் தலைவர்களுக்குப் பின்னால் அவர்களுடைய தந்தையோ அல்லது கணவரோ இருப்பார்கள். இந்திராகாந்தி அம்மையாருக்குப் பின்னாலே நேரு இருந்தார். பாகிஸ்தானிலே பெனாசீருக்குப் பின்னாலே அவரது தந்தை பூட்டோ இருந்தார். இலங்கையிலே சந்திரிகாவுக்குப் பின்னாலே அவரது தந்தை பண்டார நாயகே இருந்தார். பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவுக்குப் பின்னாலே அவரது தந்தை முஜ்பூர் ரஹ்மான் இருந்தார். கலிதா ஜியாவுக்குப் பின்னாலே அவருடைய கணவர் ஜியாவுர் ரஹ்மான் இருந்தார். ஆனால், அம்மா அவர்களுடைய வரலாறு என்பது முற்றிலும் ஒரு சிறப்புமிக்கது. பொன்மனச் செம்மல் ஐயா எம்.ஜி.ஆர். அவர்களால் அரசியலிலே அவர் வழிகாட்டப்பட்டார். அதன் பின்னாலே, ஆறு முறை முதலமைச்சராக வரும் அளவுக்கு அவர் சிறப்புகளைப் பெற்றார் என்று சொன்னால் காரணம் அது அம்மா அவர்களுடைய அயராது உழைப்பும், அறிவும், ஆற்றலும் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவூட்ட, பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் கலைத் துறையிலே புகழ் பெற்றார். அரசியல் துறையிலே வியத்தகு சாதனைகளைப் புரிந்தார். எதையும் கூர்மையாகச் சிந்திப்பதும், சிந்தித்தவற்றை துணிச்சலாகச் செயல்படுத்துவதும் அவருடைய சிறப்பாக இருந்தது. அவரது அறிவாற்றல் அனைவராலும் பாராட்டப்பெற்றது. பலருக்கும் தெரியாத ஒன்று, அவர் புத்தகங்களோடு பயணித்தார் என்பது. தனிமையை விரும்பினார்; அந்த தனிமையிலே புத்தகம் அவரோடு தோழமைக் கொண்டது. அதனால்தான் உலக அறிவை அவர் விரல் நுனியிலே வைத்திருந்தார். அதேநேரம் தனக்கு உலக அறிவு இருந்தது என்பதை அடிக்கடி அவர் காட்டிக்கொண்டதில்லை. நூலகத்திலே ஒரு புத்தகம் எப்படி அமைதியாக இருக்குமோ அப்படி அமைதியாக இருந்தார். ஆனால், அனைத்து உலக விவரங்களையும் தன்னகத்தே பெற்றுக்கொண்டிருந்தார்.

இராஜ்ய சபாவிலே அவருடைய புகழ் பெற்ற பேச்சு சாதரணமான விஷயம் அல்ல. ஐயா, மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள்கூட இப்போது சுட்டிக்காட்டினார்கள். மாநில சுய ஆட்சிக்கு, அண்ணா அவர்களின் மொழியிலே, அண்ணா அவர்களின் வழியிலே பேசினார். மின்சாரம் வேண்டும், அதிகாரம் வேண்டும். அதை அண்ணா அவர்களின் ஆங்கிலத்திலேயே பேசினார். Power' வேண்டும், 'Power'-ம் வேண்டும் என்று பேசினாரே, அந்தப் பேச்சுத்தான் நாட்டை கூர்ந்து கவனிக்கச் செய்தது. இவரைப்பற்றி. இந்திரா காந்தி அம்மையாரையே ஒருபுறம் சிந்திக்கத் தூண்டியது எனலாம். அப்படிப்பட்ட அறிவாற்றலுக்குச் சொந்தக்காரராக அவர் திகழ்ந்தார்.

*முற்பகல் 10-55*

ஒரு முறை, உலகப் புகழ் பெற்ற ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். உங்களில் பலருக்குத் தெரியும். இன்று இந்தியாவிலேயே மிகச் சிறந்த பல்கலைக்கழகம் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம். உலக socialism சோஷியலிகத்தின் தாயகம் என்றே சொல்லலாம். அங்கே படிப்பதற்குப் பலரும் தவம் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு மாணவனும் ஒரு பேராசிரியருக்குச் சமமானவன். ஒவ்வொரு மாணவனிடத்திலும் யாரும் அவ்வளவு எளிதில் அரசியல் பேசிவிட முடியாது. அங்கே திபெத்தைப் பற்றியும் பேசுவார்கள்; ஈழத்தைப் பற்றியும் பேசுவார்கள்; பாலஸ்தீனத்தைப் பற்றியும் பேசுவார்கள். அப்படிப்பட்ட உலக அறிவின் தாயகமாக இருக்கக்கூடிய அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அம்மா அவர்கள் செல்கிறார்கள். அங்கே மாணவர்களைச் சந்திக்கிறார்கள். அந்த மாணவர்கள் அம்மா அவர்களிடம் சரமாரியாகக் கேள்வி கேட்கிறார்கள். உலக நாடுகளுடைய அரசியலைப் பற்றிப் பேசுகிறார்கள். வல்லரசு நாடுகளுடைய அரசியலைப் பற்றிப் பேசுகிறார்கள். G8 நாடுகளுடைய பொருளாதார வலிமைகளைப் பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். அந்த மாணவர்களிடத்திலே அம்மா அவர்கள் வியத்தகு பதில்களை அளிக்கிறார்கள். ஆங்கிலத்திலே பேசுகிறார், ஃபிரஞ்ச் மொழியிலே பேசுகிறார், எண்ணற்ற மொழிகளிலே பதிலளித்து, உலகப்புகழ் பெற்ற ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்களையே வியப்பில் ஆழ்த்துகிறார்.

இந்தியாவின் தலைநகர் டில்லியிலே அமைந்துள்ள Press Club of India-க்கு வருகைத் தந்தார். அறிவுஜீவிகள் நிறைந்த, பத்திரிகை உலகத்தார் நிறைந்த அந்த அவையிலே பத்திரிகைகாரர்களின் கேள்விகளுக்கு பன்மொழிகளிலே பதிலளிக்கிறார். இந்தச் சட்டப்

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2017 ஜனவரி 24

பேரவையிலே இரண்டு பேர்தான் பன்மொழி புலவர்கள் என்று பாராட்டப்பட்டார்கள். ஒன்று, மாண்புமிகு அம்மா அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட காலஞ்சென்ற சிறுபான்மை சமுதாயத்தினுடைய மதிப்பிற்குரிய தலைவர் ஐயா அப்துல் லத்தீப் அவர்கள். அவர் 13 மொழிகளிலே பேசி Polyglot என்று அம்மா அவர்களால் பாராட்டப்பட்டவர். அடுத்து, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். பல மொழிகளிலே அவர் ஆளுமை பெற்றிருந்த காரணத்தினாலேதான் அவர் டெல்லி சென்றபொழுதெல்லாம் நாடு முழுக்க இருக்கக்கூடிய தலைவர்கள் தேடி வந்து சந்தித்தார்கள். பத்திரிகையாளர்கள், அறிவுஜீவிகள் அவரைத் தேடி வந்து சந்தித்தார்கள். அது அவருடைய சிறப்பை எப்பொழுதும் பேசும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் அறிவை உணர்ந்த காரணத்தினால்தான் மரியாதைக்குரிய உலகப்புகழ் பெற்ற பெண்மணி ஹிலாரி கிளிண்டன் அவர்கள் தலைமைச் செயலகத்திற்கே அம்மா அவர்களைத் தேடி வந்து ஒரு மணி நேரம் உரையாடினார்கள். அம்மா அவர்களின் தொட்டில் குழந்தைத் திட்டத்தால் ஈர்க்கப்பட்ட கருணையின் உள்ளமாகவும், இல்லமாகவும் திகழ்ந்த அன்னை தெரசா அவர்கள் அம்மா அவர்களைத் தேடி வந்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். அம்மா அவர்களுடைய காலத்தில் அவருடன் சட்டமன்றத்தில் இடம் பெற்றது எனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பாக நான் கருதுகிறேன். அவர் அங்கீகரித்தக் கட்சிகள் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தன. அவர் அங்கீகரித்தக் கட்சிகள் சட்டமன்றத்திற்குள் நுழைந்தன. அவரால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் பின்னாளிலே அரசியல் உலகிலே மறக்க முடியாத, மறுக்க முடியாத சிறப்பான தலைவர்களாக உயர்ந்தார்கள். அப்படிப் பலருக்கும் வாய்ப்புகளை வழங்கினார்கள்.

அவர் தமிழ்நாட்டின் நலன்களுக்காக சமரசம் இல்லாமல் போராடினார். பெரியார் அவர்களின் வழியில், அண்ணா அவர்களின் வழியில் மாநில உரிமைகள் காக்க பாடுபட்டார். டெல்லி எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் என்றும், அதிகார குவியல் கூடாது என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். இட ஒதுக்கீட்டிற்காக அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. பெரியார் அவர்களின் கனவுகளை, அண்ணா அவர்களின் சிந்தனைகளை நினைவுபடுத்தும் விதமாக, 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்காக அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அதற்காக



2017 ஜனவரி 24] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

அவர் நடத்திய சட்டப் போராட்டம் அனைத்துத் தரப்பையும் வியக்க வைத்தது. அதனால்தான் திராவிடர் கழகம் “சமூக நீதி காத்த வீராங்கனை” என்ற பட்டத்தை அவருக்குக் கொடுத்து மகிழ்ந்தது. அவரது ஆட்சியிலே, 2006 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கும், கிறித்துவர்களுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கச் செய்ய முதன்முதலிலே ஆணையம் அமைக்க அரசாணை வெளியிட்டார் என்பதை நான் நன்றியோடு இந்த அவையிலே பதிவு செய்கிறேன். உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில் ரமலான் மாதத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் நோன்பு கஞ்சி காய்ச்ச, இலவச அரிசி வழங்கி அவரது நேசத்தை வெளிப்படுத்தினார்.

காமராஜர் ஐயா அவர்களின் குடும்பம் வறுமையிலே வாடியதை பலர் சுட்டிக்காட்டியபோது, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைத்து, வேலை வேண்டுபவர்களுக்கு வேலை, வீடு வேண்டும் என்பவர்களுக்கு வீடு, நிதியுதவி தேவைப்பட்டவர்களுக்கு நிதியுதவி என்று அவருடைய அன்பை அவர்கள்மீது வெளிகாட்டினார்கள். அண்ணா அவர்களின் நூல்களை அரசுடைமையாக்கி, அவரது குடும்பத்திற்கு, திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கு 75 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயரை நாகப்பட்டினம் மாவட்டத்திற்குச் சூட்டி மரியாதை செய்தார்கள். ஏழைகளின் ரேஷன் அட்டைக்கு 20 கிலோ இலவச அரிசி வழங்கினார்கள். இன்று அதுதான் வறட்சியிலே வாடிக்கொண்டிருக்கிற ஏழையெளிய குடும்பங்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கிறது என்பதை மக்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள்.

அவரது “தொட்டில் குழந்தைத் திட்டம்” அவரது மனிதாபிமானத்திற்கு எடுத்துக்காட்டு; “மழைநீர் சேகரிப்புத் திட்டம்” அவரது தொலைநோக்கிற்கு எடுத்துக்காட்டு; மாணவ மாணவிகளுக்கு “இலவச லேப் டாப் வழங்கும் திட்டம்” அவரது கனிவிற்கு எடுத்துக்காட்டு. ஈழத் தமிழர்களின்மீது, மீனவர்களின்மீது, ஒடுக்கப்பட்ட மக்களின்மீது அவர் கனிவு காட்டினார்.

இந்த அவையிலே நான் பேசும்போதெல்லாம், புன்னகையை வெளிப்படுத்தி, சிரிப்பை வெளிப்படுத்தி, மேசையைத் தட்டிப் பாராட்டியதை என்னால் மறக்கவே முடியாது. சென்ற கூட்டத்தொடரின் கடைசி சில நாட்களில் அம்மா அவர்கள்

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2017 ஜனவரி 24

பேசிவிட்டு எழுகிறார்கள், நான் சில சமுதாய கோரிக்கைகளுக்காக ஓடோடிச் சென்று அந்த இடத்திலே வழிமறித்து அம்மா அவர்களிடம் பேசுகிறேன். ஐந்து நிமிடங்கள் நின்று கொண்டு என்னிடம் பேசினார்கள். பேசியபோது, என்னைப் பார்த்துச் சொன்னார். நீங்கள் மிகவும் சிறப்பாகவும், பிரமாதமாகவும் பேசுகிறீர்கள். உங்களுடைய வார்த்தைகள், உங்கள் உள்ளத்திலிருந்து வெளிப்படுகின்றன என்பதனை நான் உணருகின்றேன் என்று பாராட்டியபோது, உண்மையிலேயே நான் சிலிர்த்த தருணங்கள் சாதாரண விஷயமல்ல.

*முற்பகல் 11-00*

“சிங்கம்” போன்று இருந்தவர் இல்லாத இந்த அவைக்கு வருகைத் தரும்போது, அம்மா அவர்கள் இல்லையே என்பதை இன்று நினைத்துப் பார்க்கின்றபோது, என் உள்ளம் உடைவதை நான் அறிவேன். ஒட்டுமொத்த தமிழினமும், அவருடைய மரணத்திற்காகத் தன்னுடைய ஆழ்ந்த வருத்தங்களை வெளிப்படுத்தியது. எந்த அளவுக்கு என்று சொன்னால், எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகோதரர்கள், சமூக இணையதளங்களில் கவிதை ஒன்றை எழுதினார்கள். “தாயே! நீங்கள் ஆளக்கூடாது என்றுதானே சொன்னோம், வாழக் கூடாது என்று சொல்லவில்லையே!” என்று உருகக்கூடிய அளவிற்கு அவருடைய மரணம் சகல தரப்பிற்கும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதை இந்த நேரத்தில் நான் நினைவூட்டுகின்றேன். அம்மா அவர்களுடைய புகழை வரலாறு பாராட்டும்; தமிழ்நாடு பாராட்டும். இந்தியா அவருடைய புகழைத் தொடர்ந்து பாடிக் கொண்டிருக்கும், எப்படித் தெரியுமா? எந்த ஒன்று தமிழ்நாட்டில் நடந்தாலும், ‘அம்மா மட்டும் இருந்திருந்தால்’ என்ற சொல் தொடர்ந்து பேசப்பட்டுக் கொண்டேயிருக்கும். அவருடைய ஆளுமை பேசப்பட்டுக் கொண்டேயிருக்கும். மனித நேய ஜனநாயகக் கட்சி அவரது புகழை எப்போதும் போற்றிக் கொண்டிருக்கும் என்று கூறி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

***DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS:** Honourable Speaker Sir, I stand here today for the second term as the representative of my community, because of my beloved Amma. I owe a lot, a tremendous



2017 ஜனவரி 24] [Dr. (Tmt) Nancy Ann Cynthia Francis]

part of my life to this great Lady. She has empowered me together with all the other women of Tamil Nadu. She has praised me, she has shown a lot of affection. She was a dynamic, caring, loving, sharing leader. Yes, she was in short having all the qualities of a true mother and that is why the whole of Tamil Nadu refers to her and even internationally she is known as Amma of Tamil Nadu. She lived every second of her life, she took every breath of her life, every heart beat of her heart was for the people of Tamil Nadu. The world has definitely lost a wonderful leader. All we can do is to live upto her expectations and that is, I think the greatest tribute that we, as the people of Tamil Nadu can give for this wonderful leader who gave everything for us. May God grant her soul eternal peace. Nanri, vanakkam.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரை, நான் ஓர் அரசியல்வாதியல்ல; நான் ஒரு சமுதாயவாதி. சமுதாயவாதியாக என் எண்ணத்திலே அதை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவர், “தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள்” என்று கூறியவரும், இன்றும் எங்களைப் போன்றவர்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவருமான என் தெய்வத் திருமகனார் திரு. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்கள்தான்.

1995-ல் நந்தனம் கலைக் கல்லூரியில் நான் படித்தேன். அன்றைக்கு, அந்தக் கல்லூரியின் மாணவர் பேரவைக் குழுவில் இருந்தேன். அப்போது, இங்கே இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அந்தக் கல்லூரிக்கு வந்திருக்கிறார். அன்றைய நேரத்தில், அந்த இடத்திலே, 1995-லே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பசும்பொன்னாருக்கு ஒரு சிலையை நிறுவி, அந்தச் சாலைக்கு “பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சாலை” என்ற பெயரை வைத்தார்கள். அன்றைக்கு கள்ளர், மறவர், அகமுடையார் ஆகிய மூன்றையும் சேர்த்து “தேவரினம்” என அறிவித்து, அதற்காக ஓர் அரசாணையையும் வெளியிட்டார். அந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது உங்களால் மட்டும்தான் நடக்கும். அதற்கான ஓர் அரசியல் அங்கீகாரத்தைக் கொடுங்கள் என்று நான் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே கேட்டபோதுதான் இந்த ஒரு வாய்ப்பை எனக்குக் கொடுத்தார்கள்.

[திரு. சே. கருணாஸ்] [2017 ஜனவரி 24

*முற்பகல் 11-05*

உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும் சினிமாவிலேகூட பெரிய நடிகனா, சிறிய நடிகனா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், ஓரளவுக்கு மக்களுக்குப் பிடித்த நடிகன் என்பது மட்டும் என்னுடைய நம்பிக்கை. அவர்களிடத்திலே நான் சென்று, என்னை திடீரென்று அழைத்தவுடன் நான் எடப்பாடி அய்யா மற்றும் வைத்திலிங்கம் அவர்களையும் சந்தித்து, நான் சென்று பார்த்தபொழுது என்னிடத்திலே நிச்சயமாக இந்தச் சபையிலே சொல்கிறேன். வெறும் 1,500 ரூபாய்தான் இருந்தது. என் சமுதாயத்திலே என்னைவிடப் பெரியவர்கள் வயதிலும் சரி, அனுபவத்திலும் சரி, வசதியிலும் சரி, எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கடந்து எனக்கு இந்த அங்கீகாரத்தை எந்த நம்பிக்கையில் அவர்கள் கொடுத்தார்கள் என்பது எனக்கு இன்றுவரை புலப்படவில்லை. ஆனால், நான் அவர்களிடத்திலே சொன்னது, நிச்சயமாக உங்களுடைய நலத் திட்டங்களையும், நீங்கள் சரியாக 1972-லே புரட்சித் தலைவர் அவர்கள் இந்த இயக்கத்தை உருவாக்கியிருந்தாலும்கூட, அதற்குப் பிறகாக நீங்கள் 1983-லிருந்து இந்த இயக்கத்திலே உங்களை ஐக்கியப்படுத்திக்கொண்டு, 1991-லிருந்து 2016 வரை 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஓர் அப்பழுக்கற்ற, தனக்கென்று இல்வாழ்க்கைகூட இல்லாது 'மக்களுக்காகவே நான், மக்களால் நான்' என்கின்ற அந்த உண்மையான வார்த்தைகளை நேசித்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய உங்கள் நம்பிக்கையை நிச்சயமாக நான் காப்பாற்றுவேன். எனக்கு ஒரு வாய்ப்பு அளித்தால் என் சமூகம் சார்ந்த மக்களுடைய பிரச்சினைகளுக்கு, சின்ன சின்ன பிரச்சினைகளுக்குக்கூட என்னால் முடிந்த அளவுக்கு இந்த அதிகாரத்தைக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய முடியும். அதேநேரத்தில், ஒரு நடிகனாக பிரச்சாரம் செய்தால்கூட எனக்கு ஏதாவது ஊதியம் கிடைக்கலாம். ஆனால், என்னைச் சார்ந்து என்னோடு இருக்கக்கூடிய இளைஞர்கள் எல்லாம் ஆட்டோ ஓட்டுபவர்கள், மூட்டை தூக்குபவர்கள், கரிமூட்டம் போடுகிறவர்கள், இப்படி அடிமட்டத்தில் இருக்கக்கூடிய இளைஞர்கள், அவர்களுடைய விருப்பம் ஓர் அங்கீகாரம். அந்த அங்கீகாரத்தை நீங்கள் மட்டும்தான் எனக்குக் கொடுக்க முடியுமென்று கேட்டேன் என்று சொன்னால் அது உலகமறிந்த உண்மை.



2017 ஜனவரி 24] [திரு. சே. கருணாஸ்]

எவ்வளவோ மிகப்பெரிய தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இதே சட்டமன்றத்திலே விடுதலைச் சிறுத்தைகளுக்கு அங்கீகாரம் கொடுத்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். பாட்டாளி மக்கள் கட்சிக்கான ஒரு பெரிய அங்கீகாரத்தைக் கொடுத்ததும் இதே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இன்னும் எண்ணற்றபேரைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இதே சபையில் ஓர் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை அடைந்த விஜயகாந்த் அவர்களுக்கான ஒரு பெரிய அங்கீகாரத்தைக் கொடுத்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அந்த வரிசையிலே என்னையும் இந்த சபையிலே இருக்கக்கூடிய வாய்ப்பை கனவிலும்கூட நினைத்துப் பார்க்க முடியாத, நான் ஏற்கெனவே என்னுடைய கன்னிப் பேச்சிலே இங்கே சொன்னேன்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்திலே நாய்கள் படுத்து உறங்கிய இடத்தில் தூங்குவதற்குக்கூட வழியில்லாமல் திரிந்த என்னை, அதே விடுதி வளாகத்திலுள்ள ஒன்பதாவது மாடியில் ஓர் அறையைக் கொடுத்து என்னை அழகு பார்த்திருக்கிறீர்கள் என்று சொன்னேன். அது உண்மை. அதில் எந்த மாற்றமும் இல்லை. அதை எத்தனையோ பேர் விமர்சனமும் செய்தார்கள். ஆனால், இதை எதற்காக இந்த இடத்திலே சொல்கிறேன் என்று சொன்னால், நான் கடந்த இடைத்தேர்தலிலேகூட, சில தொகுதிகளுக்குச் சென்று பேசும்போதுகூட ஒன்றைச் சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான் கீழே இருக்கக்கூடிய தொண்டர்கள் யாரை வேண்டுமானாலும் மேலே நிறுத்தக்கூடிய ஒரு சக்தியாக இருக்கக்கூடியவர் என்று நான் சொன்னேன். அந்தவகையிலே எனக்கு நிறைய பேச வேண்டுமென்ற எண்ணங்கள்.

அவர் இங்கே முதலமைச்சராக இருந்த நேரங்களில் விதி 110-ன்கீழ் அவர் அறிவிக்கின்ற திட்டங்களைப் பாராட்டிப் பேசக்கூடிய ஒரு வாய்ப்பு எங்கள் மூவருக்கும் கிடைக்கும். அந்த நேரங்களில் எங்களுக்குள் பரிட்சை எழுதுகின்றபோதுகூட இல்லாத ஓர் உள்பயம். அந்த அளவுக்கு இந்த இடத்திலே ஒரு நிலையினை நினைக்கின்றபோது அவர் மறைவு என்பது ஈடுசெய்ய முடியாதது.

*முற்பகல் 11-10*

குறிப்பாக, என்னைப் பொறுத்தவரை என் சமூகம் சார்ந்த அந்த இட ஒதுக்கீடு நிச்சயமாக இவர்களால் அடைந்துவிட

[திரு. சே. கருணாஸ்] [2017 ஜனவரி 24

முடியுமென்ற நம்பிக்கையில் நான் இருந்தேன். வேறு யாரும் செய்ய மாட்டார்கள் என்று நான் நினைத்தேன். கள்ளர், மறவர், அகமுடையோரை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்து, அட்டவணையில் சேர்த்து அவர்களுக்கான உள் இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும். அவர் வழங்குவார் என்று நம்பினேன். இன்றைக்கு அது என் மனதில் கேள்விக்குறியாக இருக்கிறது. நான் வேறு எதையும் எதிர்பார்த்து இந்த இடத்திற்கு வரவில்லை. எனக்கு இப்படி ஓர் அங்கீகாரம் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்த அமைப்பை நான் உருவாக்கி வெறும் ஆறே ஆண்டுகள்தான் ஆகின்றன. இந்த ஆறு ஆண்டுகளில் இப்படி ஓர் அங்கீகாரம் எனக்குக் கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால், இதை எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, இன்றைக்கு அவர் இல்லை என்கின்றபோது உண்மையைச் சொல்கின்றேன், அவர் இருந்தபொழுது இந்தச் சபைக்கு வருவதற்கு ஏற்பட்ட ஓர் உற்சாகம் இன்று இல்லை. நான் நிச்சயமாகச் சொல்கின்றேன், எனக்கு இந்த அதிகாரமே வேண்டாம் என்கின்ற மனநிலையிலே இருக்கின்றேன். நான் இதை ஆத்மபூர்வமாகச் சொல்கின்றேன்; மன நிம்மதி இல்லை.

நடிகர்கள் என்றைக்கும் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனாலும், நான் பழகியது மிக, மிகக் குறுகிய காலங்கள்தான், குறுகிய நேரங்கள்தான். ஆனால், அவர் மறைந்த நேரத்தில், நான் மட்டுமல்ல, என் குடும்பத்தார், குறிப்பாக என் மனைவி, என் குழந்தைகள், இந்த உலகத்திலுள்ள மொழிசார்ந்தவர்கள் மட்டுமல்லாது, மற்றவர்களும்கூட, தங்கள் வீட்டிலிருந்த ஒருவர் இறந்துவிட்டதைப் போன்ற உணர்வினையும், மன நிலையையும், மன அழுத்தத்தையும் கொண்டிருந்தார்கள். அவர் எனக்காகவும், இந்தத் தேசத்திற்காகவும், இந்த மக்களுக்காகவும் வாழ்ந்துகாட்டிய அந்த வாழ்க்கை மதிக்கப்பட வேண்டியது. என்றைக்கு என் தெய்வத் திருமகனாருக்கு தங்கக் கவசம் சாற்றி, அவரை தெய்வ நிலைக்கு மாற்றினாரோ, அதே தெய்வ நிலையை அம்மா அவர்கள் அடைவார்கள். என்றைக்கும் அவருடைய புகழ் நிலைத்திருக்கும்.

என்னிடத்திலே அவர் எதிர்பார்த்தது, என்னுடைய நன்றியையும், விசுவாசத்தையும் மட்டும்தான். அது என்றைக்கும் அம்மா அவர்கள்மீதும், அம்மா அவர்களுடைய வழியிலே, கொள்கையிலே நடந்து கொண்டிருக்கக்கூடிய இயக்கத்தின்மீதும்



2017 ஜனவரி 24] [திரு. சே. கருணாஸ்]

என் உயிர் உள்ள வரை இருக்கும். நான் மட்டுமல்லாது, நான் சார்ந்த, என்னை நம்பி இருக்கக்கூடிய அத்தனை பேரும், எனக்கு இந்த நிலையை உருவாக்கிய அவர்களுடைய எண்ணங்களோடு, சுமைகளோடு, நினைவுகளோடு எங்களுடைய வாழ்க்கையைக் கடக்கின்றதாக நான் நினைக்கின்றேன், உணர்கின்றேன் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறியாத வயதில் தந்தையை இழந்து, அறியவரும் வயதில் தாயை இழந்து, சொல்லொணாத் துன்பங்களைத் துய்த்து, எதிர்வந்த தடைக் கற்களைத் தகர்த்து, நாளெல்லாம் துயரங்களைச் சுமந்து, அனைவரும் வியக்கும் அயராத உழைப்பாலும், எல்லையில்லா வீரத்தாலும், மாற்றார் போற்றும் மதிநுட்பத்தாலும், அவனி போற்றுகின்ற அழியாத ஆற்றலாலும், ஈடு இணையில்லா தியாகத்தாலும், தனி ஒரு தலைவியாகப் போராடி, இமாலய வெற்றி பெற்று, உச்சத்தின் உச்சங்களைத் தொட்ட உலகத்து அதிசயம், இறைவனடி இணைந்துள்ள எங்கள் குடும்பத் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இளைப்பாறும் திசை நோக்கி வணங்குகிறேன். மலர்ப் பாதை விரிப்பில் நடந்து, மகுடங்கள் சூடியவர் அல்ல; நேரு மகள் இந்திரா, பூட்டோ மகள் பெனாசீர் என்றெனும் வாரிசுகளின் வரிசையில் வந்த வம்சாவழி வரலாறும் அல்ல; காட்டாறுகளைக் கடந்து, கல்லும் முள்ளும் நிறைந்த கடினங்களைத் தாண்டி, தம்மைத் தாமே செதுக்கிக்கொண்ட சுயம்பு. தரணி வியக்கும் உச்சங்களைத் தமதாக்கிய இமயத்து விளிம்பு, விண்தொட்ட வெற்றிகளை விவேகத்தால் எட்டியவர்; அண்ணா அமர்ந்த மாநிலங்களவை இருக்கையைத் தமதாக்கி, பின்னாளில், அவர் சுட்டுவிரல் காட்டிச் சிரிக்கின்ற, அண்ணாவின் பெயரிலான இயக்கத்தை உயர்வாக்கி, அகிலமே அண்ணார்ந்து பார்க்கும் மூன்றாம் பெரும் இயக்கம், ஆறு முறை முதலமைச்சர் என வரிசைகட்டிய புரட்சிகளை வார்த்தெடுத்த சரித்திரச் செப்பேடு மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை. எல்லோருக்கும் வியப்பாக, எல்லையில்லா வெற்றிகளின் தொகுப்பாகத் திகழ்ந்து, எமக்காக ஏதுமில்லை, எல்லாமும் மக்களுக்கே என, தமக்காக வாழாத, தவ வாழ்வு வாழ்ந்து, தியாகச் சரித்திரம் படைத்திட்ட மாண்புமிகு அம்மா அவர்கள், ஓடி ஓடி உழைத்தார்கள், ஓய்வில்லாது களைத்தார்கள், ஊர் வாழ உழன்றே, உடல் நலத்தைத் தொலைத்தார்கள், உலகத் தமிழர்கள் நெஞ்சில் நிறைந்து, உலக வாழ்விற்கு விடை

கொடுத்தார்கள். நெஞ்சிலே எழுதிய அந்தச் சோகக் கீதங்கள் மறையவே இல்லை. அழுத இதயங்கள் இன்னும் ஆறுதல் அடையவில்லை.

*முற்பகல் 11-15*

கவிஞர் கண்ணதாசன் சொன்னதுபோல, 'சீரிய நெற்றி எங்கே, சிரித்த முகம் எங்கே, கூரிய விழிகள் எங்கே, குறுநகையும் போனது எங்கே, நேர் பார்வை எங்கே, நிமிர்ந்த நன்னடைதான் எங்கே' என எல்லோரையும் வருந்த வைத்து, 'நித்தமும் வணங்கும் தோற்றம், நிலத்தினில் விழுந்தது இங்கே' என அனைவரையும் அழ வைத்து, பச்சைக் குழந்தை பாலுக்கு தவித்திருக்க, பெற்றவளை அந்த பெருமான் அழைத்துச் சென்றான். சேய் கிளையைக் கலங்கவிட்டு, தாய்க் கிளையைக் கொண்டு சென்றான். சேயாக இருக்கும் 10 கோடி தமிழ் மக்களைக் கலங்க வைத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் என்னும் தாய்க் கிளையை பறித்துச் சென்றான்.

இப்பேரவையில் பல்வேறு தீர்மானங்கள், விதி 110-ன்கீழ் அறிவிப்புகளாக வெளியிடப்படுகையில், அவை குறித்து என் கருத்தை எடுத்துவைக்கையில் மிகுந்த மகிழ்ச்சியுற்றுள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் எனக்கு வழங்கப்பட்ட இந்தப் பதவி குறித்து எத்தனையோ நேரங்களில் நான் பெருமைப்பட்டுள்ளேன். இன்றையதினம், துரதிருஷ்டவசமாக, இந்த இரங்கல் தீர்மானத்தின்மீது உரையாற்றும் இந்தத் தருணத்தை நினைத்து மிகுந்த வேதனைப்படுகிறேன், துன்பப்படுகிறேன். என்னுடைய வாழ்நாளில் எனக்குக் கிடைத்த துர்பாக்கியமாகவே இதனைக் கருதுகிறேன், வேதனையில் துடிக்கிறேன். வார்த்தைகள் வெளிவர மறுக்கின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்தபோதும், முதலமைச்சராக இருந்தபோதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களோடு உரையாடும் பல வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. அயராத உழைப்பு, கட்சி மீதான பற்று, தீர்க்கமாகத் திட்டமிடல், பன்மொழிப் புலமை, இலக்கை நோக்கிய பயணம், அறிவுக் கூர்மை என அவரிடம் அமைந்திருந்த பண்புகளைக் கண்டு மிகுந்த பிரமிப்பு அடைந்துள்ளேன்.



மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த எளிய தொண்டனிடம் மாறாத பற்றும், குறையாத அன்பும் என்றைக்கும் கொண்டவராகத்தான் திகழ்ந்தார்கள். அன்றையதினம் முதல் இன்றையதினம் வரையில் அம்மா அவர்கள் எனக்கு அளித்த பணியை சிரமேற்கொண்டு, உண்மையாகவும் விசுவாசியாகவும் திகழ்ந்து, என் கடமையைச் செய்துள்ளேன். ஏன், என் வாழ்நாள் முழுவதும், மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ்பாடும் விசுவாசியாகத்தான் இருப்பேன். நான் மட்டுமல்ல, என் குடும்பத்தினரும் மாண்புமிகு அம்மா அவர்களை எங்கள் குடும்ப தெய்வமாகத்தான் தொழுது வருகிறோம். என்னுடைய குடும்பத்தாருடன் மாண்புமிகு அம்மா அவர்களை ஒவ்வொரு முறை சந்திக்கச் செல்லும்போதும், என் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் விசாரித்து, மகிழ்ச்சியோடு கலந்துரையாடுவார்கள். என் குடும்ப உறுப்பினர்களை தன் சொந்த குடும்ப உறுப்பினர்களாக நினைத்து, அன்போடும், பாசத்தோடும், நேசத்தோடும் அவர்கள் உரையாடுவார்கள். பல நேரங்களில் எனக்கு அது நெகிழ்வை ஏற்படுத்தும்.

தலைவர் என்ற நினைப்பு இல்லாமல் அவர்கள் செயல்பட்ட விதம் எனக்கு சிலிர்ப்பைத் தந்தது. இரண்டு முறை நான் விபத்தில் பாதிக்கப்பட்டு, என் குடும்பம் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்த நேரத்தில் என்னையும் என் குடும்பத்தையும் தாயாக இருந்து காத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு உயிர் கொடுத்தவர் என்னைப் பெற்ற தாயாக இருந்தாலும், இன்றைக்கு நான் நடமாடிக் கொண்டிருக்கிறேன் என்றால், அதற்கு முழு முதற் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை நான் என்றென்றும் நன்றியுடன் நினைவில்கொள்வேன். இந்த எளிய தொண்டனை நடமாட விட்டுவிட்டு, ஒன்றரைக் கோடி தொண்டர்களை மட்டுமல்ல, 10 கோடி தமிழர்களையும், தமிழின மக்களையும் மீளாத் துயரில் மூழ்கடித்துச் சென்றுள்ளார்கள்.

*முற்பகல் 11-20*

"வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களின் உயர்வுக்காகப் போராடியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆனால், இன்றைக்கு என்னை எடுத்துக்கொள், என் தமிழ் நெஞ்சங்களுக்கு இன்னும் நிறைய வளத்தைத் தா என மக்கள் வாழ்வாங்கு வாழ வரத்தைத் தா" என நேரிலே இறைவனிடத்திலே போராடச் சென்றாரோ,

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 24

நெஞ்சம் பதைக்கிறது. என் உயிரிலே கலந்தவரை, ஊனுறக்கமின்றி உழன்றவரை, அல்லும் பகலும் அயராது உழைத்தவரை, தாயாகி, தந்தையாகி, யாதுமாகி யாமிருக்க பயமேன் என்ற உயர்ந்த தமிழர் குலச் சாமியாகி உழைத்த எங்கள் அம்மா அவர்களை ஏன் எடுத்துச் சென்றாய், இறைவா! காலனே, கணக்குப் புத்தகத்தில் சரிவர பாராமல் தவறு செய்தாயோ! நெஞ்சம் துடிக்கிறது, நினைத்தாலே மனம் நொறுங்குகிறது.

மிகவும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த எனக்கு, இந்தப் பேரவையின் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பை இரண்டு முறை தந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் தயாபரம் அம்மா அவர்கள் என்றே நிரூபித்தார்கள். தனிப்பட்ட முறையில் எனக்கு மட்டுமல்ல, நான் சார்ந்துள்ள சமுதாயத்திற்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிறைய செய்ய வேண்டும் என்கிற அவா மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே நிறைய உண்டு. ஒரு முக்கியப் பிரச்சினைக் குறித்து உரையாடுகையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் என்னிடத்தில் கூறிய வார்த்தைகள் இன்னும் என் மனதிலே பசுமரத்தாணிபோல பதிந்துள்ளது. "தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்கு நிறைய செய்ய வேண்டும், நிறைய யோசனைகளை, திட்டங்களை நான் வைத்திருக்கிறேன், அத்தனையும் செயல்படுத்த வழிவகைகளைக் காண வேண்டும்; நிதி ஆதாரங்களைக் காண வேண்டும்; நிச்சயம் அனைத்தையும் செயல்படுத்திக் காட்டுவேன்" என்று அவர் பேசியது என் மனதை அழவைத்தது. அன்றையதினம் முழுவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் குரலே என் மனதிலே ரீங்காரமிட்டு ஒலித்துக் கொண்டே இருந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாக என்றைக்கும் திகழ்ந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தடாகத்தைப் பற்றி நினைக்கும்போது, ஒரு தாமரை இதழ் விரித்து தன்னைக் காட்டுகிறது. விண்ணைப் பற்றி எண்ணினால் நிலவின் குளிர்முகம் தெரிகிறது. பொதுவுடைமை பற்றிய சிந்தனைகள் கார்ல் மார்க்ஸை நினைவுபடுத்துகிறது. காந்தியைப் பற்றி எண்ணும்போது, அகிம்சையின் குரல் ஒலிக்கிறது. வாரி வழங்கும் வள்ளல் தன்மை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை அடையாளம் காட்டுகிறது. போர்க்குணமும், போராட்ட உணர்வும், நெஞ்சுறுதியும், துணிச்சலும், தளராத நம்பிக்கையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அடையாளம் காட்டுகிறது.



2017 ஜனவரி 24] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அம்மா அவர்களின் பன்முகத் தன்மை எல்லோருக்கும் தெரிந்ததே. அதைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். அன்பு, ஆற்றல், இரக்கம், ஈகை, உண்மை, ஊக்கம் என அவர்களுடைய குணங்களைப் பற்றிச் சொன்னால் நேரம் போதாது. மக்களுக்காகவே அவர் சிந்தித்து வாழ்ந்தவர். மக்களிடம் அவருக்கு அதீத ஈடுபாடு இருந்தது. தமிழக மக்கள் நலம் பெற, தமிழகம் வளம் பெற, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எவ்வளவோ திட்டங்கள். சோழநாடு காத்திட்ட சொக்கத் தங்கம் மாண்புமிகு அம்மா அவர்கள், தலைக் காவேரி மீட்டெடுத்த கலைக் காவேரி மாண்புமிகு அம்மா அவர்கள்; உழவுத் தொழில் காத்திட்ட உயிரோவியம் மாண்புமிகு அம்மா அவர்கள்; தமிழகத்தைக் காத்திட்ட தாயுருவ தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்; வறட்சி தீர்த்து வாழ வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஏழையெளிய மக்களுடைய வறுமையைப் போக்குவதற்கு அவர்கள் தீட்டிய திட்டங்கள் யாவும் அசாதாரணமானவை. சந்தனமாய்க் கரைந்து, சங்கத் தமிழ் பூமிக்கு சாதனைகளைக் குவித்தார்கள். ஒத்த ரூபாய் வாங்காமல் உலைக்கு அரிசியை உவகையோடு கொடுத்தார்கள், பசிப் பிணிப் போக்கும் அம்மா உணவகங்களைத் திறந்து, மணிமேகலையாய் ஆனார்கள். கருணையோடு கறவை மாடுகள், ஆடுகளை மனதாரக் கொடுத்தார்கள். பாச மழை பொழிந்து, பசுமை வீடு கொடுத்தார்கள். மதிப்பெண் குவிக்க மடிக்கணினி, மிதிவண்டி எனத் தந்து மகராசியாய் உயர்ந்தார்கள். பெற்றோரது பாரத்தைப் பெருமையோடு சுமந்தார்கள். தாலிக்குத் தங்கம் தந்து, தாய்க்குலத்தை தன்னுயிராய்க் காத்தார்கள். கருத்தரிப்பவர் பத்துக் குழந்தைகளுக்குத் தாயாகலாம், நான் 10 கோடி தமிழினத்தின் தாயாக இருப்பேன் என தவத்தாலே வாழ்ந்தார்கள். தவ வாழ்வு வாழ்ந்து, தாய்மைக்கே மகத்துவம் தந்தார்கள்.

*முற்பகல் 11-25*

அரசியலில் வேறுபாடு இருந்தாலும், மாச்சரியங்கள் இருந்தாலும், செய்யக்கூடிய காரியங்களில் பாகுபாடு இல்லாமல், ஆளும் கட்சித் தொகுதி, எதிர்க்கட்சித் தொகுதி என்று பாராமல் தமிழ் மக்களுக்காக நான் வாழ்கிறேன், தமிழுக்காக நான் வாழ்கிறேன் என்ற உணர்வோடு வாழ்ந்துகாட்டிய ஒரு மாபெரும் தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதுபோல அவை

நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும்போது, முதலமைச்சராக இருந்தாலும், ஓர் உறுப்பினர் என்ற முறையில், தான் ஆற்ற வேண்டிய கடமையை மிகச் சரியாக அவர்கள் ஆற்றினார்கள். அவர்கள் இந்த அவையில் நடந்து கொண்டது நமக்கெல்லாம் பாடம். சிறந்த முதலமைச்சரை, மிக உயர்ந்த செயல்பாடுடைய உறுப்பினரைப் பெற்றமைக்காக இந்தப் பேரவை நிச்சயமாகப் பெருமைகொள்கிறது என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. இத்தகைய மாமனிதர் மறைவுற்றுள்ளார். சட்டமன்றத்தில் அவர்கள் நடந்துகொள்ளும் முறை குறித்து உண்மையிலே நான் பல நேர்வுகளில் ஆச்சரியப்பட்டுள்ளேன். பேரவைக்கு உரிய மரியாதையைத் தர அவர்கள் என்றைக்கும் தவறியதில்லை. விரல் நுனியில் அனைத்து விவரங்களையும் வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும், அவர்களும் தெளிவுபெறும்வண்ணம், மிக எளிமையாக எடுத்துச் சொல்லும் இயல்பு, இந்த அவையில் உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைக்கு உதாரணமாக அமைந்தது. மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பில் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், டிசம்பர் 5 ஆம் தேதி இரவில், மறைவுற்றார் என்ற துன்பச் செய்தியை தமிழகம் கேட்டவுடன், இந்த இருண்ட சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்று கட்சிப் பாகுபாடு இல்லாமல் வருத்தம் அடைந்தனர்; தமிழகத்திலுள்ள தாய்மார்கள், உழைப்பாளி பெருமக்கள் அனைவரும் தங்கள் தலைவியை இழந்துவிட்டோம், தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்துவிட்டோம் எனக் கண்ணீரும் கம்பலையுமாகத் தடுமாறிய காட்சியே அதற்குச் சான்று. தங்களுடைய நம்பிக்கை நட்சத்திரத்தை, ஒரு தனி மனித இராணுவத்தை, உரிமைக்காகப் போராடும் ஒரு தலைவரை இழந்ததாகவே மக்கள் கருதினார்கள்.

“தேசத்தின் அடையாளச் சின்னமாகத் திகழ்ந்தவர் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்” என குடியரசுத் தலைவர் புகழஞ்சலி செலுத்தியுள்ளார். “மக்களுடன் நெருக்கமாகத் தொடர்பு வைத்திருந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைகளின் நலனுக்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர்” எனவும் “இந்தியாவில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கியுள்ளார் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்” எனவும், பாரதப் பிரதமர் மதிப்பிற்குரிய திரு. மோடி அவர்கள் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்கள். இவ்வாறு பல மாநில முதல்வர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர். மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவு பெண்கள், விவசாயிகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் பெரிய இழப்பாக அமைந்துள்ளது என அனைவரும் கூறியுள்ளனர். ஆம், தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு பெரும் இழப்பாகும் மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவு. மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவால் வருந்தும் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





ஒப்பற்ற விலை மதிக்க முடியாத மாணிக்கத்தை இழந்ததற்கு எந்த வகையில் ஈடு செய்யப் போகிறோம் என்று சொன்னால், அவர் நினைத்த காரியங்களை, அவர் கொண்ட இலட்சியங்களை சிரமேற்கொண்டு நிறைவேற்றுவதன் மூலமாக, இந்தத் தேச மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்று, அவர் கண்ட கனவை நனவாக்குவதன் மூலமாக, ‘தமிழன் தலைநிமிர்ந்து நடக்கச் செய்வேன்’ என அவர் கொண்டிருந்த சூளுரையை செயலாக்குவதன் மூலமாக, தமிழகம் முதல் மாநிலம் என முன்னேற்றி எடுத்துச் செல்வதன் மூலமாக ஈடு செய்வோம். அந்த வகையில், நாம் அவருக்கு அஞ்சலி செலுத்த முடியும். “புரட்சித் தலைவி அம்மா நாமம் வாழ்க” என்னும் உந்துவிசை கூட்டுகிற ஒப்பில்லா மந்திரத்தையும் இனி சேர்த்தே ஒலிப்போம்.

*முற்பகல் 11-30*

எது வரினும், எவ்விடர் வரினும், தாயின் வழித்தடத்தில் நடந்தே, தடைகளைத் தகர்த்தே சாய்ப்போம். ஒரு தாயின் பிள்ளைகளாய் ஒற்றுமையாய் உழைப்போம். ஒற்றுமையால் அரண் அமைப்போம், உலகத் தமிழினம் உயரவே, தன் ஒப்பில்லா வாழ்வையே அர்ப்பணித்த அம்மா அவர்களின் இலட்சிய தீபத்திற்கு எண்ணெய்யாய், திரியாய் நம்மையே கொடுப்போம். அம்மா அவர்களின் கனவுகள் நனவாகி ஒளி வீச அயராது உழைப்போம். அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற அஞ்சலி. அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆன்மா சாந்தி பெறுவதற்கான வழி என்பதைத் தெரிவித்து, இந்த அளவோடு, இந்த இரங்கல் தீர்மானத்தின்மீது என்னுடைய தாழ்மையான கருத்துகளைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 24

*இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த பெருந்தகை தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

*மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலே, பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.*

*பேரவை மீண்டும் 27-1-2017 (வெள்ளிக்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை முற்பகல் 11-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

------